மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

திருமயம் தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள்

*1689 திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதியில், சிறுதொழில் மானியக்கடன், அரசு நிலங்களைக் கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தைப்பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் இலவசமாக அமைக்கத் திட்டம் ஏதுமில்லை. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமும், சிறு தொழில் மானியத்துடன் அரசு நிலங்களை கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டமும் எதுவுமில்லை. இருப்பினும் விவசாயிகள் சங்கம் அமைத்து, நிதி வசதி பெற்று வேளாண்மைப் பொறியியல் துறையை அணுகினால், விசைத்துளைக்கருவி குறைந்த வாடகைக்கு வழங்கிப் பணியை செய்து கொடுக்க இயலும்.

திரு. ஆலவயல் சுப்பையா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் டி. பி. ஏ. பி. திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் நிறைய ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. ஆனால், தற்சமயம் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவதை மத்திய அரசு தடை செய்வதாகச் சொல்கிறார்கள். சாதாரண கிணறுகள் மட்டுமே அமைக்கப்படுகின்றன. நிலத்தடி நீர் மிகவும் ஆழத்திற்குப் போய் விட்டமையாலும், கிணறு வெட்டிப் பயன் இல்லை என்பதாலும், மீண்டும் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடும் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி

*6499 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, எங்கு தொடங்கப்படும் ?